RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# பெரியபுராணம் உணர்த்தும் கலைகள்

பூ. அக்ஷயா [அ, *], த. மகிலா ஜெனி [அ]

[அ] தமிழ்த்துறை, தமிழாய்வு மையம், இலக்குமிபுரம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நெய்யூர்- 629 802, கன்னியாகுமரி மாவட்டம், தமிழ்நாடு, இந்தியா

# Arts Depicted in the Periyapuranam

P. Akshaya [a, *], D. Mahila Jeni [a]

[a] Research Centre of Tamil, Lekshmipuram College of Arts and Science, Neyyoor-629802, Kanyakumari District, Tamil Nadu

* Corresponding Author:
akshayaabi8089@gmal.com

## ABSTRACT

Periyapuranam is a celebrated Tamil devotional epic that narrates, in a historical and literary manner, the profound devotion to Lord Siva and the exemplary service rendered by the sixty-three Nayanmars, in accordance with the spirit of the Tirukkural maxim, “Great are those who accomplish difficult deeds.” The term Purāṇam denotes an ancient history or sacred narrative, and the title Periyapuranam signifies a “great” or “glorious” puranic work. In the traditional classification of Tamil texts as primary texts (Muthal Nool), derivative texts (Vazhi Nool), and ancillary texts (Saarbu Nool), Periyapuranam is regarded as an ancillary text. The work is composed of two cantos (kāṇḍams), thirteen sections (sarukkams), and 4,286 verses in the viruttam metre. The first canto comprises five sections, while the second canto consists of eight sections, each detailing the lives and spiritual achievements of the Saiva saints. Beyond its religious and historical significance, Periyapuranam also serves as a valuable source for understanding the cultural and artistic traditions of Tamil society. Art enriches human life and contributes to its aesthetic and intellectual fulfillment. Traditionally, arts are classified into two broad categories: fine arts (nuṇkalai), which include forms such as natural beauty, music, dance, and drama, and practical or applied arts (parukkalai), encompassing disciplines such as science, engineering, and astronomy. The distinction between these categories reflects the diverse dimensions of human creativity and knowledge. Against this background, the present study examines the various forms of art represented in Periyapuranam and highlights their significance in illuminating the cultural, aesthetic, and intellectual heritage embedded within the text.

**Keywords:** Periyapuranam, Fine Arts, Applied Arts, Music, Dance, Drama, Intellectual Heritage

## முன்னுரை

செயற்கரிய செய்வர் பெரியர் என்னும் குறள் வரிக்கேற்ப அறுபத்து மூன்று நாயன்மார்கள் புரிந்த இறை பக்தியையும், தொண்டு நெறியையும் வரலாற்று முறையில் கூறும் நூல் பெரியபுராணமாகும். இந்நூல் அறுபத்து மூன்று நாயன்மார்களின் வாழ்க்கையை விவரிக்கிறது. தில்லை அம்பலத்தே ஆடும் சிவபெருமான் உலகெலாம் என்று அடியெடுத்து கொடுக்க சேக்கிழார் இலக்கியப் பெருங்களஞ்சியமாகப் பெரியபுராணத்தை இயற்றி அருளினார். அப்பெரியபுராணம் உணர்த்தும் பலவிதமான கலைகள் இருந்தன என்பதனைப் பற்றி இக்கட்டுரையில் ஆராயப்படவுள்ளது.

## பெரியபுராண விளக்கம்

புராணம் என்பது பழைய வரலாறு எனப் பொருள்படும். பிறமொழி கதைகளன்றி, தமிழ் மக்களின் தமிழ் மொழியில் அதுவும் தொன்மைமிக்க சிவநெறிக் கொள்கைகளில் ஊறி,செம்மாந்து நின்ற அரிய பெரிய மக்களைத் தமிழில் முதல் காப்பியமாகவும் வரலாற்றுக் காப்பியமாகவும் அமைந்த தெய்வச் சேக்கிழார் பெருமானுக்கும் உண்டு.

ரிக், யஜுர், சாமம், அதர்வணம் என்ற நான் மறைகளுக்கும், கண்ணனே கூறிய பகவத்கீதைக்கும், உலகிலுள்ள அனைத்து சமய புனித நூல்களுக்கும் கூடிய பெரிய என்ற அடைமொழியைக் கொடுத்திலர். இயற்பெயரான திருத்தொண்டர் புராணம் என்ற பெயர் மறைந்து மக்கள் சூட்டிய பெயரே பெரியபுராணம். பழையான வரலாற்றைக் கூறுவதால் பெரியபுராணம் எனப் பெயர் கொண்டது. பெரிய என்பதைப் பெயரெச்சமாகக் கொண்டு பெருமை உடைய புராணம் எனவும் கூறுவர். முதல் நூல், வழி நூல், சார்பு நூல் என்ற முறையில் இதுசார்பு நூலாக அமைந்துள்ளது.

## நூல் அமைப்பு முறை

பெரியபுராணம் என்னும் நூல் தமிழகச் சூழலையும், அறுபத்து மூன்று நாயன்மார்களின் சிறப்பையும் மையமாகக் கொண்டு திகழ்கிறது. இந்நூல் 2 காண்டங்களையும், 13 சருக்கங்களையும், 4286 விருத்தப்பாக்களையும் கொண்டுள்ளது. முதற்காண்டம் திருமலைச்சருக்கம், தில்லைவாழ் அந்தணர் சருக்கம், இலைமலிந்த சருக்கம், மும்மையால் உலகாண்ட சருக்கம், திருநின்ற சருக்கம் என ஐந்து சருக்கங்களாகவும். இரண்டாம் காண்டம் வம்பறா வரிவண்டுச் சருக்கம், வார்கொண்ட வனமுலையாள் சருக்கம், பொய்யடிமை இல்லாத புலவர் சருக்கம், கறைக்கண்டன் சருக்கம், கடல்சூழ்ந்த சருக்கம், பத்தராய்ப் பணிவார் சருக்கம், மன்னிய சீர்ச் சருக்கம், வெள்ளானைச் சருக்கம் என எட்டுச் சருக்கங்களாகவும் பகுக்கப்பட்டுள்ளது.

## பெரியபுராணத்தில் கலைகள்

கலை வாழ்க்கையை இன்பமயமாக்குகிறது. அழகுணர்ச்சியை வெளிப்படுத்துவதே கலையாகும். எப்பொருளிலும் செயலிலும் கவர்ச்சியைத் தோற்றுவிக்கும் அழகு வேலைப்பாடுகளைக் 'கலை' கொண்டுள்ளது. அன்றாடம் உண்பது முதல் உறங்குவது வரை வாழ்க்கை முழுவதுமே கலை எனப்படும். இயற்கை எழில், நாடகம் போன்றவை நுண்கலை என்றும் ஏனைய அறிவியல், பொறியியல், வானியல் போன்றவை பருக்கலை என்றும் குறிப்பிடப்படுகிறது. ஆகவே தான் கலையை நுண்கலை என்றும் பருக்கலை என்றும் இரண்டாகப் பிரிக்கின்றனர். இவ்விரு கலைகளும் சமுதாயத்தில் ஒன்றி உயிரிற் கலந்தொளிர்வதைப் பெரியபுராணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஆடற்கலை

சோழ நாட்டுத் திருவாரூர் ஆடற்கலைக்குப் புகழ் பெற்றுத் திகழ்ந்தது. அவ்வூரில் தேர்ச்சிப் பெற்ற நடனமாதர் வாழ்ந்தனர். சுந்தரர் திருவாரூருக்குச் சென்ற பொழுது ஆடற்பெண்டிர் நடனமாடி வரவேற்றதை

"மங்கல கீதம் பாட

மழைநிகர் தூரியம் முழங்கச்

செங்கயல்கண் முற்று இழையார்

தெற்றி தொறும் நடம்பயில"(பெ.பு-268).

என்ற இப்பாடல் வரிகள் உணர்த்துகின்றன. எனவே பெரியபுராணம் உணர்த்தும் கலைகளில் பெரியோர்களை நாட்டியமாடி வரவேற்றனர் என்றும், ஆடற்கலை சிறப்பாக மதிக்கப்பட்டது என்றும் அறியமுடிகிறது.

## வரிக்கூத்து, துணங்கைக் கூத்து

வரிக்கூத்தென்பது குறவர் குறிஞ்சிப் பண்பாடி ஆடும் ஆட்டமாகும். துணங்கைக் கூத்து என்பது குறப்பெண்டிர் வெற்றிக் களத்தில் மகிழ்ச்சியாக பாடியாடிய ஆட்டமாகும்.

திண்ணனின் வில் விழா ஏழு நாட்களுக்குக் கொண்டாடப்பட்டது. ஒவ்வொரு நாளும் பலவகை ஆடல்கள் நிகழ்த்தப் பெற்றன. வேடரின் வரிக்கூத்து வேடிச்சியரின் துணங்கைக் கூத்து, சூரரமகளிரின் ஆட்டங்கள் முதலியன வில் விழாவில் இடம் பெற்றதை

“பேரணி நெடுவே லாற்குப் புகழ்புரி குரவை தூங்குப்

பேரணங் காடல் செய்து பெருவிழா வெடுத்த பின்னற” (பெ. பு. 660).

இப்பாடல் வரிகள் உணர்த்துகின்றன.

## குணவைக் கூத்து

குணவைக் கூத்து என்பது மகிழ்ச்சி மிகுதியால் பாட்டோடு சேர்ந்து ஆடும் ஒருவகைக் கூத்தாகும். காரைக்காலம்மையார் பேய் வடிவம் கொண்ட பொழுது வானிலிருந்து மலர் மழை பொழிந்தது. தேவ துந்துபிகள் தாமாக முழங்கின. தேவர்களும் முனிவர்களும் குலாவி மகிழ்ந்தனர். சிவ கணங்கள் மகிழ்ச்சியால் குணவைக் கூத்தாடியதை,

“மலர் மழை பொழிந்தது எங்கும்

வானதுந்துயியன் நாதம்

உலகு எலாம் நிறைந்து விம்ம

உம்பரும் முனிவர் தாமும்

குலவினர் கணங்கள் எல்லாம்

குணவை இட்டன முன்னின்று”(பெ.பு-1772).

என்ற இப்பாடல் வரிகள் உணர்த்துகின்றன.

## பாடற்கலை

இசைக்கு மயங்காதார் யாருமிலர். கேட்பவர்களை இசைய வைப்பதால் இசை என்றாகிற்று. இசை இன்றேல் இன்பமில்லை. எனவேதான் இறைவனும் இசைவடிவமாகவுள்ளார். திண்ணன் கன்னி வேட்டைக்குப் புறப்பட்ட பொழுது முன்னால் கொம்புகள் ஊதப்பட்டன, சிறு பறைகள் முழங்கப்பட்டன, பம்பைகள் கொட்டப்பட்டன, வேடர்கள் கைகளைத் தட்டி ஆரவாரம் செய்தனர். இவ்வாறு பல்லோசைகள் சேர்ந்து இசை பெருகியதை,

“கோடுமுன் பொலிக்கவும் குறுங்கணா குளிக்குலம்

மாடு சென்று இசைப்பவும்” (பெ. பு. 721).

என்னும் பாடலடிகள் மூலம் அறியமுடிகிறது. வேட்டையாடிய பொழுதும் இசைக்கலை போற்றப்பட்டது பெரியபுராணம் திருஞானசம்பந்தர் மழலைப் பருவமாகிய மூன்றாம் வயதிலேயே இறைவனைப் பாடத்தொடங்கினார் என்னும் சிறப்பினை எடுத்துரைக்கிறது.

## சிற்பக்கலை

ஓவியக் கலையிலிருந்து வளர்ந்தது சிற்பக்கலை. சிற்ப வேலைகளை கற்பாறைகள், கற்றூண்கள் மரங்கள் மற்றும் மண்களிலே செய்தனர். கோயில்களில் வடிக்கப்பட்ட சிற்பங்கள் இன்றும் உயிரோடு விளங்குகின்றன. குங்குலியக் கலயர் திருப்பனந்தாளில் சாய்ந்திருந்த லிங்கத்தை நிமிர்த்தி வழிபட்டார். திருப்புன்கூரில் நந்தனார் சிவலிங்கத்தை வழிபட்ட பொழுது, லிங்கத்தின் முன்பாகவுள்ள நந்தியின் சிற்பம் மறைந்து இடையூறு செய்தது. இவற்றினின்றும் அன்றைய சமூகத்தில் மக்கள் இறைவனைச் சிற்பங்களாகச் செய்து வழிப்பட்டனர் என்பதை

“சேனையும் ஆணை பூண்ட

திரளும் எய்த்து எழாமை நோக்கி

யானும்இல் இளைப்புற்று எய்க்கும்

இதுபெற வேண்டும் என்று” (பெ. பு. 862).

இப்பாடல்வரி மூலம் அறிய முடிகிறது. சிற்பக்கலை கால இடைவெளியின்றிக் காலந்தோறும் படிப்படியாக வளர்ந்து உயர்நிலை பெற்றது.

## கட்டடக்கலை

பழம்பெரும் கோயில்கள், மாளிகைகள் முதலியவைகள் கல், மண், சுதை, சுட்டமண் போன்றவற்றால் கட்டப்பட்டன. கட்டடங்களில் ஓவியங்கள், சிற்பங்கள் அமைந்து. வண்ணக் குழம்புகளைப் பூசி அழகு செய்தை,

"கொந்து அலர்பூங் குழல் இமயக் கொம்பு கம்பர

கொள்ளும்பூ கனைக் குறித்த தானம் காக்க

மந்திரமா மதில் அகழி அவர்தாம் தந்த

வாய்மை ஆகம விதியின் வகுப்பு போலும்" (பெ. பு. 1169).

இப்பாடல்வரி மூலம் அறிய முடிகிறது.காஞ்சி நகரில் தேர் சென்ற வீதிகளின் ஓரங்களில் மாளிகைகளின் திண்ணைகள் மரகத மணிகளால் அமைக்கப்பட்டிருந்தது. வீதிகள் பொன்னாலும் மணிகளாலும் அணி செய்யப் பெற்றிருந்தன. ஆடலரங்கங்கள் அழகுற அமைக்கப்பட்டிருந்ததை,

"ஆங்கு வளர் எயிலனுடன் விளங்கும் வாயில்

அப்பதியில் வாழ்பெரியோர் உள்ளம் போல" (பெ. பு. 1170).

இப்பாடல்வரி மூலம் அறிய முடிகிறது.சமுதாயத்தில் வீதிகளும், மாளிகைகளும், ஆடலரங்களும் சிறந்த சிற்ப வேலைப்பாடுகளால் அமைக்கப்பட்டிருந்ததை அறிய முடிகிறது.

## ஓவியக் கலை

நுண்கலைகளுள் தொன்மையானது ஓவியக்கலை. இது காண்போரை வியப்பில் ஆழ்த்தி தன் பக்கம் ஈர்க்கும் ஆற்றலுடையது. அப்பூதியடிகள் நாவரசரை வரவேற்பதற்குத் தம் இல்லத்தைக் கோமயத்தால் மெழுகி, சுண்ணச்சாந்தாற் கோலமிட்டு விளக்கேற்றி உபசரித்தார்.இல்லங்களில் கோலமிட்டு அழகு செய்யப்பட்டதை,

"புகழ்ந்த கோமயத்து நீரால்

பூமியைப் பொலிய நீவித்

திகழ்த்துவான் சுதையும் போக்கி" (பெ. பு. 1826).

என்றப் பாடல்வரி மூலம் அறிய முடிகிறது. இடங்கழி நாயனார் வாழ்ந்த கோணாடு இயற்கை வளங்கள் நிரம்பியது. கடலை ஆடையாக உடுத்திய நிலமாகிய பெண்ணின் மார்பகத்தில் சந்தனக் குழம்பைக் கொண்டு இலை வடிவில் எழுதப்பட்ட தொய்யில் என்னும் அணி திகழும் நாடு கோணாடு என பெரியபுராணம் காட்டும் ஓவியக்கலை ஓங்கிருந்தது.

## கல்விக்கலை

கல்வி நுண்கலைகளுள் ஒன்று. இது தொன்று தொட்டு இயல்பாகவும், செயற்கையாகவும் பயிரப்பட்டு வருகிறது. பிற கலைகளைப் போல இன்பத்தை அளிப்பதுடன் பகுத்தறிவையும், பண்பாட்டையும் புகட்டும் ஆற்றலுடையது. பெரியபுராணத்தில் மாணவர்கள் கலைகளைக் கற்பதற்கு முன்பே ஆசிரியர் வியக்கும் வண்ணம் அறிவிற் சிறந்தோராய் திகழ்ந்தனர்.

திருஞானசம்பந்தர் ஈசனை ஆசிரியராகக் கொண்டவர். உமாதேவியுடன் விண்ணில் தோன்றிய இறைவனைத் தனது தந்தையாகச் சுட்டிக் காட்டினார். அப்பொழுது "தோடுடைய செவியன்" என்று இறைவனின் அடையாளங்களைத் தந்தைக்குச் சுட்டிக் காட்டினார். சிறுத்தொண்டர் எனப்பட்ட பரஞ்சோதியன் மகன் சீராளனை மூன்று வயதில் தலை முடியை நீக்கி, மொட்டையடித்து அதன்பின் பள்ளிக்கு அனுப்பினார்.

"வந்துவளர் மூவாண்டின் மயர்விளை மங்கலஞ் செய்து"(பெ.பு-280.5)

இப்பாடல்வரி மூலம் அறிய முடிகிறது. ஆசிரியரால் கற்பிக்கப்படாமலே இறையருளால் பாட்டு பாடும் வல்லமை இயல்பாகவே கற்றிருந்தனர் என்றும், மூன்று வயதிலேயே பள்ளிக்கு அனுப்பியவர் என்றும் தெறிய முடிகிறது.

## சோதிடக்கலை

கணித நூல்களைக் கற்று மனிதர், பறவை, விலங்கு முதலியவற்றின் இயக்கங்களையும், காலத்தையும் கணித்துப் பலாபலன்களைக் கூறுபவர்களைக் கணி என்றும் கணிதர் என்றும் அழைப்பர். அவர்களைத் தற்காலத்தில் ஜோதிடர் என்பர். அவர்கள் கணித்துக் கூறும் கணித்தற்கலையே சோதிடக்கலை எனப்படுகிறது. வானத்தில் உள்ள கோள்களைக் கணித்து, அவற்றின் இயக்கங்கள், இடமாற்றங்களைக் கணக்கிட்டுப் பலன் கூறுதல் வானநூற் கலை என்ற வானவியல் கலையாகும். மனிதர்களின் உள்ளங்கைகளில் உள்ள வரிக்கோடுகள் என்ற ரேகைகளைக் கணித்துப் பலன் கூறுதலும் கணிதற் கலையேயாகும். கணித்தற் கலையைப் பெரியபுராணம் குறிப்பாகவும், சிறப்பாகவும் விளக்குகின்றது.

சுந்தரர் மணக்கோலம் பெறுவதற்காகக் கணிதர் குறித்த நல்ல நேரத்திற்கு முன் திருமஞ்சன சாலையுட் புகுந்தார். இதனின்று நல்ல நேரம் பார்த்து மங்கல காரியங்களைச் செய்தனர் என்றும், நல்ல நேரத்தைக் கணித்துக் கூறுவதற்குக் கணித நூற்புலவர் இருந்தனர் என்பதை,

“காலைசெய் வினைகள் முற்றிக்

கணிதநூல் புலவர் சொன்ன

வேலைவந்த அணையும் முன்னர்”(பெ.பு-160)

இப்பாடல்வரி மூலம் அறிய முடிகிறது.

## மருத்துவக்கலை

மருந்துகொண்டு நோயைக் குணப்படுத்துவது பன்னெடுங் காலமாக இருந்து வருகிறது. மருந்து இயல் என்பது மருத்துவ இயல் என்றாகிற்று. அதனின்றும் மருத்துவம் எனச் சுருங்கி வழங்கப்படுகிறது. மனிதனுக்கும் பிற உயிரினங்கட்கும் நோயைக் குணப்படுத்தி ஆயுளைத் தருவது மருத்துவம். ஆதலால் இதனை ஆயுர்வேதம் என்றனர். அதுவே தற்காலத்தில் ஆயுர்வேதம் என்றழைக்கப்படுகிறது. அப்பூதியடிகளின் மூத்தமகன் பாம்பு தீண்டி இறந்தான். அவனை அப்பர் விடம் நீங்கப் பெற்று உயிர்பெறச் செய்தார். ஏயர்கோன் கலிக்காமருக்கு சூலை என்ற வயிற்றுவலி நோய் ஏற்பட்து. இறையருளால் அது நீங்கிற்று கூண்பாண்டியன் என்ற நெடுமாறனுக்கு முதலில் வலப்பாகத்தில் வெப்பு நோய் ஏற்பட்டது. சம்பந்தரால் அது தீர்க்கப்பட்டது. மன்பாண்டியனின் இடபக்கமும் இவ்வெப்பு நோய் தாக்கியது. சம்பந்தர் இறைவனை உருகிப் பாடவே அது விலிகிற்று.

அப்பர் என்னும் நாவரசர் சமணசமயத்தில் இருந்தபோது சூலை என்னும் வயிற்றுவலி நோயால் துன்புற்றார். பின் அவர் தமக்கை திலகவதியார் திருநீறு பூசி, நோயைக் குணப்படுத்தினார் என்பதை,

“திருவாளன் திருநீறு திலகவதியார் அளிப்பப்

பெருவாழ்வு வந்தது எனப்பெருந்தகையர் பணிந்துஏற்று அங்கு”(பெ.பு-1337).

என்ற பாடல்வரி மூலம் அறியமுடிகிறது. ‘காளத்தி’ இறைவனின் வலக்கண்ணில் இரத்தம் வழிந்ததைக் கண்ட திண்ணன் பச்சிலைகளைப் பிழிந்து அவற்றின் சாற்றினால் இரத்தத்தை நிறுத்த முயன்றார். குருதி நிற்காததால் தன் கண்ணையே எடுத்து இறைவனின் கண்ணில் பொருத்தினார் என்பதை,

“மற்றவர் பிசைந்து வார்த்த

மருந்தினால் திருகாளத்திக்

கொற்றவர் கண்ணில் புண்நீர்” (பெ.பு-826).

இப்பாடல்வரி மூலம் அறியமுடிகிறது. பெரியபுராணத்தில் ஆயுர்வேதக் கலை சிறப்புற்றிருந்ததெனவும், பாம்பு விடத்திற்குத் திருநீறும் இறைப்பாடல்களும் மருந்தாகின எனவும், பச்சிலை புண் தீர்க்கவும் இரத்தத்தைக் கட்டுப்படுத்தவும் சக்தி வாய்ந்ததென அறிந்திருந்தனர் எனவும், கண் அறுவை மருத்துவத்தையும் கற்றிருந்தனர் எனவும் உணர முடிகிறது.

## சமையற் கலை

சமைத்தல் என்பது பக்குவப்படுத்துவதைக் குறிக்கும். சமையல் என்றால் பக்குவமடைதலாகும். சமைத்தல் என்பது உணவுப் பொருட்களைப் பக்குவமாக்குவதைக் குறிக்கிறது. அதுவே சமையல் என்று அழைக்கப்படலாயிற்று. பெரியபுராணத்தில் காய், கனி, நெல், அரிசி, கிழங்கு முதலியவற்றால் சமைக்கப்பட்ட உணவையும், இறைச்சி, மீன் போன்றவற்றைக் கொண்டு சமைக்கப்பட்ட உணவும்

குறிப்பிடப்படுகிறது. பரஞ்சோதியின் துணைவி இறைச்சியை உணவாகச் சமைத்தார். தாம் பெற்ற பிள்ளையைக் கொத்தி அறுத்து மூளையைப் பிரித்து சமைத்தை,

"முறித்து அவை அடுப்பின் மாட்டி

முளைவித்து பதம்முன் கொள்ள

வறுத்தபின் அரிசி ஆக்கி" (பெ.பு-459).

இப்பாடல்வரி மூலம் அறியமுடிகிறது. அரிவாள் தாய நாயனார் நாடொறும் செந்நெல் சோறு, செங்கீரை, பசுமையான மாவடு முதலிய சைவ உணவைத் தயார் செய்து இறைவனுக்களித்தார். அப்பூதியடிகள் நாவரசர்க்குத் தூய நற்கறிகளில் அறுசுவையின் இனிய அமுதாக்கி இட்டார் என்பதை,

தூய நல் கறிகள் ஆன

அறுவகைச் சுவையால் ஆக்கி

ஆயஇன் அமுதம் ஆக்கி" (பெ.பு-1810).

என்றப் பாடல்வரி மூலம் அறியமுடிகிறது. பெரியபுராணத்தில் ஈர, வீர உணவுகளைச் சமைக்கக் கற்றிருந்தனர் எனவும் சமையற்கலை சிறப்பாகத் தழைத்திருந்ததென்றும் அறிய முடிகிறது.

## முடிவுரை

பெரியபுராணம் சமுதாயத்தில் கலை, வாழ்க்கையை இன்பமயமாக்கியது என்றும், அது நுண்கலை, பருக்கலை என இரு பிரிவுகளாகப் பகுக்கப்பட்டிருந்தது என்றும் அறியமுடிகிறது. ஆடற்கலை, பாடற்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை போன்ற கலைகள் பெரியபுராணத்தில் சிறப்புற்றிருந்ததை இக்கட்டுரை மூலம் அறியமுடிகிறது.

## References

ஜகனாதன், கி.வா, (1987) பெரியபுராணம் விளக்கம், சுந்தரம் பதிப்பகம், சென்னை.

காமாட்சி, பி, (2007) பெரியபுராணம் காட்டும் சமுதாய நிலை, நிவேதா பதிப்பகம், சென்னை.

நடராஜன், பி.ரா, (2020) பெரியபுராணம் மூலமும் உரையும், உமா பதிப்பகம், சென்னை.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author's have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License